செ.வெ.எண்: 39 நாள்: 18.10.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.10.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், விராலிமலை ஊராட்சி, விராலிமலையில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக்கூடம் கட்டுமானப் பணியையும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.8,92,500/- மதிப்பீட்டில் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகள் பணியையும், பூதக்குடி ஊராட்சி, பூதக்குடியில் ரூ.5.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் செங்கல் உற்பத்திக்கூடம் கட்டுமானப்பணியையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள எல்.இ.டி மின்விளக்கும், நம்பம்பட்டி ஊராட்சி, நம்பம்பட்டியில் ரூ.80.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் காக்காச்சி குளத்தில் மரம் நடுதல் பணியையும் என மொத்தம் ரூ.1,30,07,500 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது குளங்களில் மரக்கன்றுகளை முறையாக நட்டு வளர்த்து தினமும் உரிய முறையில் நீர் ஊற்றி பராமரிக்கவும், குளங்களில் வேலிக்கருவை அகற்றப்பட்ட இடங்களில் மீண்டும் வேலிக்கருவை மரங்கள் வருவதை அகற்றி சரிசெய்யவும், மேலும் முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.எஸ்.கே.விஜயநாதன், திரு.டி.சுப்ரமணியன், உதவிப்பொறியாளர்கள் திரு.ஏ.சித்திரவேல், திரு.எஸ்.பி.கிருஷ்ணன், பணி மேற்பார்வையாளர் திரு.ஏ.ராஜசேகர், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**